بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/07/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**பனூ முஸ்தலிக் போரின் நிலைமைகளும் நிகழ்வுகளும் பற்றிய குறிப்பும் முஹர்ரம் தொடர்பான துஆவுக்கான வேண்டுகோளும்**

أَشْهَدُ أَنْ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

**இன்று, பனூ முஸ்தலிக் போர் அல்லது முரைசீஃ (مُرَيْسِيْع) பற்றி எடுத்துக் கூறுவேன்.** இந்தப் போர் எப்போது நடந்தது என்பதைப் பற்றி வரலாற்றாசிரியர்களிடம் கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. இது பற்றி சிலர் ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு நடந்தது, 4-ஆம் ஆண்டு நடந்தது என்று குறிப்பிட்டிருக்கும் நிலையில், சிலருடைய பார்வையில் இது ஹிஜ்ரி 6-ஆம் ஆண்டு நடைபெற்றது. ஆனால் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்களின் ஆய்வுக்கேற்ப இது ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் 5-ஆம் நாள் நடந்தது என்பதாகும்.

இந்தப் போர் பனூ குஸாஆவுடைய கோத்திரத்தின் ஒரு கிளையான பனூ முஸ்தலிக் என்பவர்களுடன் நடைபெற்றது. எனவே அது பனூ முஸ்தலிக் போர் என்று அழைக்கப்படுகிறது. மேலும் இந்தக் கோத்திரம் முரைசீஃ (مُرَيْسِيْع) என்ற பெயரைக் கொண்ட ஒரு கிணற்றுக்கு அருகில் இருந்து வந்தது. எனவே இந்தப் போருக்கு இன்னொரு பெயர் முரைசீஃ (مُرَيْسِيْع) போர் என்பதுமாகும்.

பனூ முஸ்தலிக் கோத்திரத்தினர் குரைஷிகளின் கூட்டாளிகளாக இருந்தனர். அவர்கள், நாம் ஒருயிராக இருந்து குரைஷிகளுடன் இருப்போம் என்று சத்தியம் செய்திருந்தனர். இந்த உடன்படிக்கையினாலேயே பனூ முஸ்தலிக் கோத்திரத்தினர் உஹது போரில் நிராகரிப்பாளர்களான குரைஷிகளின் படையில் சேர்ந்திருந்தனர்.

**இந்தப் போருக்கான ஒரு காரணம்,** பனூ முஸ்தலிக் இஸ்லாத்துடன் பகைமை பாராட்டுவதில் விஷமத்தனம் செய்பவர்களாக இருந்தனர். அவர்களுக்கு குரைஷிய நிராகரிப்பாளர்களின் முழுமையான ஆதரவும், உதவியும் கிடைத்திருந்தன. உஹது போரில் முஸ்லிம்களுக்கு எதிராகப் போரில் கலந்து கொண்டதன் காரணமாக இப்போது அவர்கள் பகிரங்கமாக முஸ்லிம்களை எதிர்ப்பதற்குக் களமிறங்கியிருந்தனர். மேலும் அவர்களின் வரம்பு மீறுவது மிகவும் அதிகமாகி விட்டது. இன்னொரு விஷயம், புனித மக்காவிலிருந்து செல்வதற்கு இடையிலான வழியில் பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் கட்டுப்பாடு

இருந்தது. இவர்கள் மக்காவில் முஸ்லிம்களின் செயல்களைத் தடுப்பதற்கு உறுதியான ஆற்றல் கொண்டவர்களாக இருந்தனர். மூன்றாவது முக்கியமான காரணம், பனூ முஸ்தலிக் கோத்திரத்தின் தலைவனாகிய ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் தனது சமுதாயத்தையும், அரேபிய மக்களையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் போரிடுவதற்காக ஆயத்தம் செய்தான். மேலும் மதீனாவிலிருந்து 96 மைல் தொலைவிலுள்ள ஓரிடத்தில் படையைத் திரட்டத் துவங்கி விட்டான்.

**இது தொடர்பாக ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் 'சீரத் காத்தமுன் நபிய்யீன்' என்ற நூலில் எழுதியிருப்பதாவது,** குரைஷிகளின் எதிர்ப்பு, நாளுக்கு நாள் அதிக அபாயத்திற்குரிய நிலையை எட்டியிருந்தது. அவர்கள் தமது சூழ்ச்சிகளால் அரேபியாவின் பல கோத்திரங்களை இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தின் தோற்றுநருக்கும் எதிராக நிறுத்தி விட்டிருந்தனர். ஆனால் இப்போது அவர்களின் பகைமை ஒரு புதிய அபாயத்தை உருவாக்கி விட்டது. அதாவது முஸ்லிம்களுடன் நல்ல தொடர்புகள் வைத்திருந்த மக்காவின் அந்தக் கோத்திரங்களும் குரைஷிகள் ஏற்படுத்திய குழப்பத்தால் முஸ்லிம்களுக்கு எதிராக கிளர்ந்தெழத் துவங்கி விட்டனர். இந்த விவகாரத்தில் பனூ குஸாஆ (بنو خُزاعه) கோத்திரத்தினரின் ஒரு கிளையாகிய பனூ முஸ்தலிக் முந்திக் கொண்டது. மேலும் மதீனாவின் மீது தாக்குதல் நடத்த ஆயத்தங்களைத் துவக்கி விட்டனர். அவர்களின் தலைவன் ஹாரிஸ் பின் அபீ ஸிரார் என்பவன் இந்த ஊரிலுள்ள மற்ற கோத்திரங்களையும் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு இது பற்றி தகவல் கிடைத்தபோது, அவர்கள் முன்னெச்சரிக்கையாக புரைதா இப்னுல் ஹுஸைப் (بُرَيْدَہ بن الحُصَيب) (ரலியல்லாஹு அன்ஹு) என்ற ஒரு சஹாபியை நிலைமையை விசாரிப்பதற்காக பனூ முஸ்தலிக் கோத்திரத்தை நோக்கி அனுப்பினார்கள். அவர்கள் திரும்பி வந்து, மதீனாவைத் தாக்குவதற்காக மிகக் கடுமையான ஆயத்தங்கள் நடந்து வருகின்றன என்று கூறினார்கள். நபி (ஸல்) அவர்கள் முஸ்லிம்களை அழைத்து, பகைவர்களைப் பற்றிய செய்தியைத் தெரிவித்தார்கள். இஸ்லாமிய படை வெகு விரைவில் ஆயத்தமாகி புறப்பட்டுச் சென்று விட்டது. நபி (ஸல்) அவர்கள் புறப்பட்டுச் செல்வது பற்றிய விபரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது:

ஓர் அறிவிப்பின்படி, நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களை மதீனாவில் துணைப் பொறுப்பாளராக நியமித்தார்கள். இப்னு ஹிஷாம் என்பவர் ஹஸ்ரத் அபூஸர் கஃப்ஃபாரீ (ரலி) அவர்களின் பெயரைக் குறிப்பிட்டுள்ளார்கள். அவ்வாறே ஹஸ்ரத் நுமைலா பின் அப்தில்லாஹ் (نُمَيْلَه بِنْ عَبْدِ الله) (ரலியல்லாஹு அன்ஹு) அவர்களின் பெயரும் கூறப்படுகிறது. எப்படி இருப்பினும், படை புறப்பட்டுச் சென்றது. இஸ்லாமிய படை 700 பேர்களைக் கொண்டதாக இருந்தது. ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி 5-ஆம் ஆண்டு ஷஃபான் மாதம் 2-ஆம் நாள் திங்கட்கிழமை மதீனாவிலிருந்து பனூ

முஸ்தலிக்கை நோக்கி சென்றார்கள். ஹஸ்ரத் மஸ்வூது பின் ஹுனைதா (مَسْعُوْدِبِنُ حُنَيْدَه) (ரலியல்லாஹு அன்ஹு) அவர்கள் வழி காட்டுபவராக இருந்தார்கள். இதன் விளக்கமாக அதிகமாகக் கூறப்படுவது என்னவெனில், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் அதிகமான நயவஞ்சகர்களும் சென்றனர். அவர்கள் இதற்கு முன்னர் இவ்வாறு எந்தவொரு போருக்காகவும் சென்றதில்லை. அவர்களின் நோக்கம் ஜிஹாது செய்வதாக இருக்கவில்லை; மாறாக, அவர்கள் போர்ச் செல்வங்களுக்காக வெளியே வந்திருந்தனர். வெற்றி கிடைத்தால், நமக்குப் போர்ச் செல்வம் கிடைக்கும் என்பதற்காக வெளியே வந்திருந்தனர்.

படையில் வெறும் முப்பது குதிரைகள் இருந்தன. ஆயினும் ஒட்டகங்களின் எண்ணிக்கை ஓரளவுக்கு அதிகமாக இருந்தது. மேலும் அந்த குதிரைகள், ஒட்டகங்களிலேயே முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து ஒவ்வொரு முறையும் மாறி மாறி வாகனத்தில் சென்று கொண்டிருந்தனர். வழியில் முஸ்லிம்களுக்கு நிராகரிப்பாளர்களின் ஓர் ஒற்றன் கிடைத்து விட்டான். அவனை நபித்தோழர்கள் பிடித்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு முன்னால் கொண்டு நிறுத்தினர். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அவன் உண்மையிலேயே ஒற்றன்தான் என்பதை கண்டறிந்த பிறகு, அவனிடம் நிராகரிப்பாளர்களின் நிலைகளைப் பற்றி கேட்க விரும்பினார்கள். ஆனால் அவன் கூற மறுத்து விட்டான். அவனது நடத்தை சந்தேகத்திற்குரியதாக இருந்தது. நடைமுறையில் இருந்து வந்த போர்ச் சட்டத்தின்படி, ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவனைக் கொன்று விட்டார்கள். மேலும் இதற்குப் பிறகு இஸ்லாமிய படை அடுத்து சென்று கொண்டிருந்தது.

பனூ முஸ்தலிக் கோத்திரத்திற்கு முஸ்லிம்களின் வருகை பற்றியும், தமது ஒற்றன் கொல்லப்பட்டது பற்றியும் செய்தி கிடைத்தபோது, அவர்கள் மிகவும் அச்சமடைந்தனர். ஏனெனில் அவர்களின் உண்மையான நோக்கமெல்லாம், மதீனாவின் மீது திடீரென்று தாக்குதல் நடத்துவதற்கு எப்படியாவது சந்தர்ப்பம் கிடைத்து விட வேண்டும் என்பதாகவே இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிக உயர்ந்த விழிப்புணர்வின் காரணமாக இப்போது அவர்களுக்கு பயனடைவதற்குப் பகரமாக நஷ்டமடைய வேண்டியதாகி விட்டது. மேலும் மிகவும் அஞ்சி விட்டனர். மேலும் (பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த) அவர்களுக்கு உதவி செய்வதற்காக ஒன்று திரண்டிருந்த மற்ற கோத்திரத்தைச் சேர்ந்த மக்கள் இறைவனின் ஆதிக்கத்தின் கீழ் எப்படி அஞ்சினர் என்றால், உடனே (பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்த) அவர்களுக்கு உதவி செய்வதை விட்டு விட்டு தமது வீடுகளுக்குச் சென்று விட்டனர். ஆனால் குரைஷிகள் முஸ்லிம்களின் பகைமை தொடர்பாக, பனூ முஸ்தலிக் கோத்திரத்தைச் சேர்ந்தவர்களுக்கு எப்படிப்பட்ட சுவையை ஊட்டி விட்டனர் என்றால், அவர்கள் அதற்குப் பிறகும் போரின் எண்ணத்திலிருந்து விலகவில்லை. மேலும் முழு ஆயத்தத்துடன் இஸ்லாமிய படையை எதிர்ப்பதற்காக விருப்பம் கொண்டிருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முரைசீஃ (مُرَيْسِيْعُ) என்ற இடத்தை அடைந்தபோது நபி (ஸல்) அவர்களுக்காக தோலாலான கூடாரம் போடப்பட்டது.

ஹஸ்ரத் ஆயிஷா சித்தீகா (ரலியல்லாஹு அன்ஹா) அவர்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்தார்கள். நபி (ஸல்) அவர்கள், சஹாபா (ரிழ்வானுல்லாஹி அலைஹிம்) அவர்களின் வரிசைகளை ஒழுங்குபடுத்தினார்கள். நபி (ஸல்) அவர்கள் முஹாஜிர்களின் கொடியை அபூபக்ர் (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள். இன்னொரு கூற்றில், முஹாஜிர்களின் கொடி அம்மார் பின் யாசிர் (ரலி) அவர்களிடம் கொடுக்கப்பட்டது என்றும் வருகிறது. மேலும் அன்சார் சஹாபிகளின் கொடி ஹஸ்ரத் சஅது பின் உபாதா (ரலி) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டது. நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களிடம், மக்களே! அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை. மேலும் அவன் மூலமாக நீங்கள் உங்களின் உயிர்களையும், செல்வங்களையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள் என்று பகைவர்களின் படைக்கு முன்னால் அறிவிப்பு செய்யுங்கள் எனக் கூறினார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அவ்வாறே அறிவிப்பு செய்தார்கள். ஆனால் இணைவைப்பவர்கள் மறுத்து விட்டனர். கொஞ்ச நேரம் அம்பு எய்வது நடந்து கொண்டிருந்தது.

இணைவைப்பவர்களிலிருந்து முதன் முதலாக ஒருவன் அம்பை எறிந்தான். மேலும் முஸ்லிம்களும் கொஞ்ச நேரம் அம்பு எய்து கொண்டிருந்தனர். பின்னர் நபி (ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குத் தாக்குதல் நடத்துமாறு கட்டளையிட்டார்கள். அவர்கள் ஒன்றுபட்டவாறு தாக்குதல் நடத்தினர். இணைவைப்பவர்களில் எவராலும் வெறுண்டோடிவிட முடியவில்லை. அவர்களில் பத்து பேர் கொல்லப்பட்டனர். மீதி அனைவரும் சிறைப்பிடிக்கப்பட்டு விட்டனர். நபி (ஸல்) அவர்கள் அவர்களின் ஆண்கள், பெண்கள், கால்நடைகள் ஆகியவற்றை சிறைப்பிடித்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது (ரலி) அவர்கள் இதன் விளக்கமாக இவ்வாறு எழுதியிருக்கின்றார்கள்:**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முரைசீஃ (مُرَيْسِيْع)என்ற இடத்தை அடைந்தபோது, அவர்கள் கூடாரமிடுவதற்குக் கட்டளையிட்டார்கள். படைகளை வரிசைப்படுத்தி, கொடிகளை விநியோகம் செய்த பிறகு நபி (ஸல்) அவர்களின் கட்டளைக்கேற்ப ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் பனூ முஸ்தலிக் மக்களிடம், இப்போதும் அவர்கள் இஸ்லாத்திற்குப் பகைமை பாராட்டுவதிலிருந்து விலகி விட்டால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஆட்சியை ஏற்றுக்கொண்டு விட்டால், அவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்படும்; முஸ்லிம்கள் திரும்பிச் சென்று விடுவார்கள் என்று அறிவிப்பு செய்தார்கள். ஆனால் அவர்கள் கடுமையாக மறுத்து விட்டனர். மேலும் போருக்காக ஆயத்தமாகி விட்டனர். எதுவரையெனில், அந்தப் போரில் எறியப்பட்ட முதல் அம்பை அவர்களிலுள்ள ஒருவரே எறிந்திருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர்களின் இந்த நிலையைப் பார்த்தபோது, நபி (ஸல்) அவர்களும் சஹாபிகளுக்குப் போரிடுமாறு கட்டளையிட்டார்கள். கொஞ்ச நேரம் இரு பிரிவினருக்குமிடையே அம்பு எய்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு நபி (ஸல்) அவர்கள் சஹாபிகளுக்கு உடனே தாக்குதல் செய்ய கட்டளையிட்டார்கள். மேலும் அந்த திடீரென செய்த தாக்குதலினால் நிராகரிப்பாளர்கள் நிலைகுலைந்து போனார்கள்.

ஆனால் முஸ்லிம்கள், அந்த முழு சமுதாயமும் கைப்பற்றப்பட்டு சரணடையும் கட்டாயத்துக்குள்ளாகும் அளவுக்கு மிகவும் சாதுரியமாக அவர்களைச் சுற்றி வளைத்து விட்டனர். ஓர் அபாயமான நிலையை அடைந்து விட்ட இந்தப் போர், பத்து காஃபிர்கள் மற்றும் ஒரு முஸ்லிம் கொலையுண்டதுடன் முடிவுக்கு வந்து விட்டது.

*ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:* **இன்று முஹர்ரம் தொடர்பாக துஆவின் பக்கமும் கவனமூட்ட விரும்புகிறேன்.** இது ஒரு வேதனை மிக்க சம்பவமாகும். இதில் கொடுமைக்கும், மிருகத்தனத்திற்குமான உச்சகட்ட உதாரணம் நிலைபெற்றிருக்கிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மகள்வழிப் பேரர்களும், அவர்களின் குடும்பத்தினரும் ஷஹீதாக்கப்பட்டனர். ஆனால் முஸ்லிம்களின் பேறிழந்த நிலை என்னவெனில், அதிலிருந்து படிப்பனை பெறுவதற்குப் பகரமாக இந்தக் கொடுமை இப்போது வரை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. முஹர்ரம் மாதத்தில் ஷீஆக்கள், சுன்னிகள் ஆகியோரின் குழப்பம் அல்லது வன்முறைத் தாக்குதல்களின் நிகழ்வுகள் அதிகமாகி விடுகின்றன. இரு பிரிவினரிடமிருந்து உயிர்களும் வீணாகின்றன. அல்லாஹ் இந்தக் குழப்பத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக தனது வாக்குறுதிக்கேற்ப ஏற்பாடு செய்திருக்கிறான். அதை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் ஆயத்தமாக இல்லை. இந்த மக்கள் புரிந்து கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்! எப்படியிருந்தாலும், இந்த நாட்களில் அஹ்மதிகள் சலவாத் ஓதுவதன் பக்கமும், முஸ்லிம்களின் ஒற்றுமைக்காகவும் சிறப்பான துஆக்களின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். நமது நிலைமைகளையும் சிறந்தவையாக்குவதற்காகவும், அல்லாஹ்வுடன் தொடர்பை அதிகமாக்குவதன் பக்கமும் குறிப்பாக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

*ஹுஸூர் அவர்கள் இறுதியில் டோகோவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய பூன்ஜா மஹ்முது சாஹிப் அவர்களின் ஷஹாதத் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேலும் மதிப்பிற்குரிய ரஷீது அஹ்மது சாஹிப், மதிப்பிற்குரிய சவுத்ரி முத்தீவுர் ரஹ்மான் சாஹிப், மதிப்பிற்குரிய மன்ஸூர் பேகம் சாஹிபா, மதிப்பிற்குரிய மாஸ்டர் சஆதத் அஷ்ரஃப் சாஹிப் ஆகியோரின் மரணம் பற்றியும், அவர்கள் பற்றிய நற்குறிப்பையும், அவர்களின் ஜமாஅத் தொண்டுகள் பற்றியும் எடுத்துரைத்தார்கள். ஹுஸூர் அவர்கள் இந்த மர்ஹூம்களின் ஜனாஸா காயிப் தொழுகையைத் தொழ வைப்பதாகவும் அறிவிப்பு செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மது H.A.,)**